# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 349/2014

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-8/PW-7 |
| Name | : செந்தில்குமார் |
| Father/Husband's Name | : திருவெங்கடம் |
| Village | : |
| Taluk | : அம்மனம்பாக்கம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.02.2025.

**முதல் விசாரணை–**

நான் தனியார் நிறுவனத்தில் ஏ.சி. மெக்கானிக்காக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2011ம் ஆண்டு, தேதி மற்றும் மாதம் நியாபகம் இல்லை, ஒரு நாள் நெப்போலியன் என்பவர் வீட்டிற்கு பழுதுப்பட்ட ஏசியை சரிப்பார்ப்பதற்காக சென்றிருந்தேன். அப்பொழுது, நெப்போலியன் மனைவி மகாலட்சுமி, மாமனார் பலராமன் மற்றும் ஆஜர் எதிரி குமரேசன் என்பவரும் உடன் இருந்தார். ஆஜர் எதிரி குமரேசன், நெப்போலியின் மனைவி மகாலஷ்மியின் மாமா ஆவார். அவர் இரயில்வேயில் பணிசெய்து வந்தார். மேலும், ஆஜர் எதிரியின் மாமனார் இரயில்வேயில் எஸ்.ஆர்.எம்.யு. தலைவருடன் நெருங்கிய பழக்கம் கொண்டவர் என்றும், அதனால் அவர்

வேலை வாங்கி தருவதாக என்னிடம் சொன்னார். இரயில்வேயில் கேட்மேன் வேலைக்கு மாதம் ரூ.18,000/- தருவார் என்று கூறினார். மேற்படி வேலைக்கு மொத்தம் ரூ.4,00,000/- கட்டவேண்டும் என்றும், முதல் தவணையாக ரூ.2,00,000/- கொடுத்துவிட்டு, மீதப்பணத்தை பிறகு தருமாறு சொன்னார்.

கடந்த 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதமே நான் இரண்டு தவணைகளாக முழு பணமான ரூ.4,00,000/-ஐ ஆஜர் எதிரி குமரேசனிடம் கொடுத்துவிட்டேன். அப்போது, நெப்போலியன் அவரது மனைவி, அவரது மாமனார் இருந்தார்கள். கடந்த 30.05.2011ம் தேதியன்று இரயில்வே துறையில் கேட்மேனுக்காக பணி நியமன ஆணையை நெப்போலியன் வீட்டில் வைத்தே ஆஜர் எதிரி என்னிடம் கொடுத்தார். பின்னர், எப்போது கூட்டிக்கொண்டு பணிக்கு செல்கிறீர்கள் என்று கேட்டபோது, ஒரு ஒரு வாரமாக காலம் தாழ்த்தினார். மேற்படி, பணி நியமன ஆணையில் சந்துரு, Chief Personal Officer, Chennai என்ற பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது. பின்னர், ஆஜர் எதிரி காலம் தாழ்த்துவதால் நான் நேரில் சென்று நெப்போலியனிடம் இதைப்பற்றி சொன்னேன். அவரும் மேற்படி பணிநியமன ஆணையை விசாரித்து சொல்வதாக சொன்னார். பின்னர், நெப்போலியன் விசாரித்து, அது போலி நியமன ஆணை என்று என்னிடம் சொன்னார். அதன் பின்னர், ஆஜர் எதிரி நெப்போலியன் வீட்டிற்கு வருவதை நிறுத்திவிட்டர். பின்னர், அதைப்பற்றி ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்று விசாரித்து போது, தான் சரிசெய்து கொடுப்பதாக சொன்னார்.

பின்னர், நான் வெளியில் விசாரித்தபோது, என்னை போலவே செந்தில் குமார், ராஜேஷ் ஆகியோர்கள் பணம் கொடுத்து ஏமாந்தது தெரிய வந்தது. அதன் பின்னர், பிரகாஷ், செந்தில் மற்றும் வீரேஷ்வரன் ஆகியோர்கள் என்னை போலேவே பணம் கொடுத்து ஏமாந்தது தெரிய வந்தது. மேற்படி, இரயில்வேயில் வேலை வாங்கி தருவதாக ஆஜர் எதிரி என்னை ஏமாற்றி மோசடி செய்தது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். போலிஸார் என்னை விசாரணை செய்தனர்.

வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.